[1973 மார்ச் 30]

சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவினாசி வட்டத்திலிருக்கிற வறட்சியான பகுதிகளுக்கு மாற்றுத் திட்டத்தைப் பரிசீலிக்கும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

Nagapattinam–Nagore Road

*578 Q.—THIRU A. RAJAMANICKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to take up the cement concreting work of the road from Nagapattinam to Nagore?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

வீடு கட்டும் திட்டங்களுக்கான உதவி

*579 வினா.—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வீடு கட்டும் திட்டங்களுக்காக ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து 1972–73-ஆம் ஆண்டுக்குக் கடன் ஏதேனும் பெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) வீடு கட்டும் திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடமிருந்து தமிழ்நாடு அரசு 1972-73-ஆம் ஆண்டுக்கு ரூ. 150 லட்சம் கடனைப் பெற்றிருக்கிறது. இதுதவிர, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வீட்டு வசதி வாரியத்திற்கு நேர்முகமாக ரூபாய் ஒரு கோடியை பிப்ரவரி 1973-ல் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்று வதற்காகக் கடனைக் கொடுத்துள்ளது.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதும் உதவி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசு நேரிடையாக உதவிகள் செய்வதில்லை. ஆனால், எல்.ஐ.சி. மூலமாகவும், 'ஹட்கோ' என்ற நிறுவனத்தின்

மூலமாகவும் கடன் உதவிகள் அளித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகச் சிலருக்கு முதலிலே மனைகள் வழங்கப்படுகின்றன. பொருளாதார வசதி இல்லாததன் காரணமாக, மனைகளை வாங்கியபிறகு, வீடு கட்டமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, வீடுகள் கட்டுவதற்கு அந்த மனைகளை வைத்துக் கடன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, மனைகளை வைத்திருப்பவர்களுக்குத் தற்பொழுது வீடுகள் கட்ட கடன்கள் அளிக்கப்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் ஒவ்வொன்றாகக் கேள்வி கேட்கவேண்டும். மெயின் கேள்வி, துணைக் கேள்வி எல்லாவற்றையும் ஒன்றாகக் கேட்கக் கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்காக நாம் கொடுக்கின்ற பணத்திற்கு வசூல் செய்கின்ற வட்டி அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வட்டி வீதத்தைக் குறைத்து வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நாம் கடன் வாங்கித்தான் வீடுகட்டுவதற்குக் கடன்கள் தருகிறோம். அந்த வகையில் எல் ஐ.சி. 6¾ சதவிகிதத்திற்குக் கடன் தருகிறது. ஆகவே, அதற்கு மேலே வட்டி வைத்துத்தான் நாம் கடன் வழங்கவேண்டிய சூழ்நிலையிலே வீட்டு வசதி அளிக்கமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் சங்கங்களின்மூலமாக, ஏராளமான கடன்வழங்க முன் வந்திருப்பதன் காரணமாக, கிராமப் புறங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாக ஏற்பட்டுள்ளன. முன்பு ரூ. 1,000 தொகை கட்டிப் பதிவு செய்துகொண்டால். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்டேட்மென்ட் கொடுக்காதீர்கள், விளக்கம் கொடுக்காதீர்கள், கேள்வி கேளுங்கள்.

1973 மார்ச் 30]

திரு. கா. வேழவேந்தன் : முன்பு ரூ. 1,000 கொடுத்து, பதிவு செய்துகொண்டிருந்ததை மாற்றி, இப்பொழுது ரூ. 8,000 கொடுத்து, பதிவு செய்யவேண்டுமென்ற விதிமுறையிருப்பதை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சங்கத்தையும் நம்பி அதன்மூலமாக, லட்சக்கணக்கான ரூபாய்கள் கடனுக வழங்கப்படுகிறது. ஆகவே, ரூ. 8,000 மிகக் குறைந்த தொகை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, டெல்லியிலே நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், இந்தியக் குடிமகனின் வருமானம் ரூ. 30 நாள் என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏழைகளுக்கு முதலிடம் கொடுப்பதற்காக ரூ. 10,000-க்கு மேல் வீடு கட்டும் திட்டம் தீட்டாமல் இருக்க அரசு முற்படுமா ? ரூ. 10,000-க்குள் வீடு கட்ட வேண்டுமென்று ஏழைகளுக்கான திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் ஏழைகளுக்கும் நடுத்தர மக்களுக்கும் பயன்படுகிற வாரியமாக இருந்துவருகிறது. ஏழைகளுக்கான வீடுகள் கட்டப் பட்டு வருகின்றன என்பதையும், ரூ. 10,000-க்கான வீடுகளை மாவட்டந்தோறும் நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 580 *Q.*—Thiru N. K. Palanisamy : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether loans are distributed for the construction of houses to Lower Middle Income and Lower Income Groups through House Building Societies in the State;

(*b*) whether such loans have been stopped since July, 1972; and

(*c*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ & (உ) மார்ச் 1972-ல் அரசு, அனைத்துக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களும், தமிழ்நாடு மத்திய வீடு அடமான